**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 07/2023**

**வாதி தரப்பு சாட்சி–2 தனபால் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 02.03.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை. பக்கத்து நிலத்துக்காரர்கள். என்னை சாட்சி அளிக்க வாதிகள் அழைத்து வந்தனரா என்றால் ஆமாம். கன்னியம்மாளுக்கும், கருப்பண்ண கவுண்டருக்கும் திருமணம் ஆனது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியை தெரியும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் இறந்த விபரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. கருப்பண்ண கவுண்டரின் வாரிசுகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

2) இறந்துபோன கருப்பண்ண கவுண்டருக்கு ராசம்மாள் மட்டும் தான் மனைவி என்றால் அது பற்றி தெரியாது. ராசம்மாளுக்கும், கருப்பண்ண கவுண்டருக்கும் பிறந்த 1ம் பிரதிவாதி மட்டும் தான் கருப்பண்ண கவுண்டரின் வாரிசு என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், கருப்பண்ண கவுண்டருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் பொய்யான சங்கதிகளை சொல்லி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டரின் வாரிசு சம்பந்தமாக ஏற்கனவே இருந்த வழக்குகள் நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். கருப்பண்ண கவுண்டருக்கு 1ம் பிரதிவாதி கண்ணம்மாள் மட்டும் தான் வாரிசு என வாரிசு சான்றிதழ் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3) கருப்பண்ண கவுண்டருக்கும், கன்னியம்மாளுக்கும் எப்போதும் திருமணம் நடைபெறவில்லை என்றும் அவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகள் வாதிகள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதிகள் வேறு ஒரு கருப்பண்ண கவுண்டருக்கு பிறந்த குழந்தைகள் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் எனக்கு நன்கு தெரியும் என்று அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதிகள் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் வாரிசு சான்றிதழ் தவறாக கொடுத்துள்ளார்கள் என கேட்டுள்ளார்கள். எனக்கு எவ்வாறு மேற்படி விபரம் தெரியும் என்றால் வாதிகள்

சொல்லி தெரியும். தவறாக வாரிசு சான்றிதழ் கொடுத்தால் அதற்கு எதிராக மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம் என்றால் சரிதான். அவ்வாறு மேல்முறையீடு செய்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. வாதிகள் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**